# உடன்பிறப்பே... 10

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த டி.கே.சீனிவாசன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## டி.கே.சீனிவாசன்

# திராவிடத் தத்துவ மேதை!




***1956*** ஆம் ஆண்டு, மே மாதம் 17 முதல் 20 ஆம் தேதி வரை திருச்சியில் நடந்தேறியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு. கழக உடன்பிறப்புகள் தமிழ்நாடெங்கும் இருந்து லட்சக்கணக்கில் திரண்டிருந்தனர். கழகம் தேர்தலில் நிற்பது குறித்த முடிவு, எதிர்கால முன்னெடுப்புகள் என அதிமுக்கியத்துவம் வாய்ந்த அந்த மாநாட்டின் மூன்றாம் நாள் கூட்டத்தில் பதினெட்டு பேருக்குத் தனித்தனி தலைப்புகளில் உரையாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கி இருந்தார் பேரறிஞர் அண்ணா.

‘திராவிடத்தின் உலகத் தொடர்புகள்’, ‘தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துகள்’, ‘கலையில் கருத்துப் புரட்சி’, ‘இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்’ என கருத்தாழம் மிக்க தலைப்புகளைத் தந்திருந்தார் அண்ணா. தலைப்புகள் மட்டுமல்ல முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர், கே.ஏ.மதியழகன், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, என்.வி.நடராசன், சி.பி.சிற்றரசு என நவீன தமிழ்ச் சமூகத்துக்கான அறிவுமுகங்களை அடையாளம் காட்டும் வகையில் சொற்பொழிவாளர்களைத் தேர்ந்தெடுத்திருந்தார்.

அந்த பதினெட்டு பேரின் உரைகளும் இன எழுச்சிக்கான திறவுகோலாக அமைந்தன. அதில் **‘தத்துவ வரலாறு’** எனும் தலைப்பில் கொள்கை முழக்கம் செய்தவர் டி.கே.சீனிவாசன். மனிதகுல வரலாற்றில் தத்துவங்களின் பங்கையும், தத்துவங்களின் பரிணாம வளர்ச்சிகளையும் எடுத்து வைத்து, தத்துவார்த்த ரீதியான உரையை வழங்கினார் டி.கே.சீ. அந்த உரையைக் கேட்ட உடன்பிறப்புகள் அன்றுமுதல் டி.கே.சீ-யை அறிவுப் பெயரிட்டு ‘தத்துவமேதை’ என அழைத்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், பெரும் அறிவியக்கம். அது உருவாக்கிய உடன்பிறப்புகளில் பலர் அறிவுச் சுரங்கம். அந்த அறிவுக் கருவூலங்களின் வரிசையில் முன்னணியில் திகழும் திராவிட உடன்பிறப்பு, தத்துவமேதை டி.கே.சீனிவாசன்.

### அரசுப் பணியிலிருந்து அரசியல்

திருச்சிராப்பள்ளி கோதண்டபாணி சீனிவாசன் எனும் முழுப்பெயர் கொண்ட டி.கே.சீ அவர்கள் 1922-ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி திருச்சியில் பிறந்தார். பசுமலை, ராமநாதபுரம் என திருச்சியில் தன் இளமைக் காலங்களைக் கழித்து, கல்வி பயின்றவர். மாணவப் பருவத்திலேயே நீதிக்கட்சியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு அரசியல் உணர்வு பெற்றார்.

தென்னக ரயில்வேயில் அரசுப் பணியைத் தொடங்கிய டி.கே.சீனிவாசன் 18 ஆண்டுகள் அந்தப் பணியில் தொடர்ந்தார். பொதுக்கூட்டங்களில் கொள்கை முழங்கப் பேசுவதும், அண்ணா வழியிலான அவரின் அரசியல் செயல்பாடுகளும் அவரது அரசுப் பணிக்கு ஆபத்தாக அமைந்தன. ஆனாலும் இயக்கப் பணியை நிறுத்தாமல் தொடர்ந்தார். அதன் பலனாக பலருக்கும் கனவாக இருக்கும் அரசுப் பணியில் இருந்து பணி நீக்கத்துக்கு உள்ளானார். ஆனால், இந்தத் தாக்குதல் அவரின் கொள்கை ஓட்டத்துக்குத் தடையாக அமைந்துவிடவில்லை. பகுதி நேரமாகச் செய்துவந்த கொள்கை பரப்பும் பணியை, முழுநேரமாகத் தொடர்ந்தார். அந்தப் பழிவாங்கும் நடவடிக்கையே அவரை அரசியலில் உச்சம் தொட வழி வகுத்தது.

தன்னுடைய இளமையிலே நீதிக்கட்சியில் இணைந்து பயணிக்க ஆரம்பித்த டி.கே.சீனிவாசன் அவர்கள், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திலும், திராவிடர் கழகத்திலும் தனது பங்களிப்பை வழங்கினார். அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து விலகி கழகத்தை உருவாக்கியபோது, கழகத்திலும் தன்னை இணைத்துக்கொண்டார்.

### உடன்பிறப்புகளின் ‘சின்ன அண்ணா’

கழகம் தொடங்கப்பட்ட போது அமைக்கப்பட்ட முதற்பொதுக்குழுவில் டி.கே.சீனிவாசன் அவர்களை இடம் பெறச்செய்து மரியாதை செய்தார் அண்ணா. அதுமட்டுமல்ல கழகத்தின் கொள்கைகளைக் கொண்டு சேர்க்க அமைக்கப்பட்ட பிரச்சாரக் குழுவிலும் தத்துவமேதையின் பெயரை இடம்பெறச் செய்தார்.

அண்ணாவின் மீது அளப்பரிய அன்பைக் கொண்டிருந்தார் டி.கே.சீனிவாசன். அண்ணாவின் மொழிநடையும், குரல் வளத்தையும் பெற்றிருந்த டி.கே.சீ.யின் மேடைப் பேச்சைக் கேட்பவர்கள் அண்ணா பேசுவது போலவே உணர்ந்தனர். அவரின் உருவமும் உயரமும் பேரறிஞரைப் போலவே இருந்ததால் உடன்பிறப்புகள் அன்பு கொண்டு ‘சின்ன அண்ணா’ என அவரை அழைத்தனர். அண்ணாவைப் போல் பேசியது மட்டுமல்ல, அண்ணாவின் கொள்கைகளையும் கடைசி வரை மேடைகளில் பேசினார் தத்துவ மேதை.

> **“என்னுடன் அளவற்ற அன்புடனும் அதே நேரம் அடிக்கடி ஊடல் கொண்டும், எதற்கும் அஞ்சாமல் எண்ணியதை எண்ணியவாறு எடுத்துக்கூறும் என் இனிய நண்பர் டி.கே.எஸ்!”**



### கலைஞர்-டி.கே.சீ. நட்பு

கழகம் அறிவிக்கும் போராட்டங்கள் அனைத்தையும் முன்நின்று நடத்திக்காட்டினார். 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற அகவிலை உயர்வை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மறியல் போராட்டத்தில் குடந்தையில் தலைமை தாங்கியதற்காக மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். சிறை அவருக்கு பயத்தை அளிக்காமல், அவரது பயணத்தின் வேகத்தை அதிகரிக்கச் செய்தது.

கலைஞருக்கும் டி.கே.சீனிவாசனுக்குமான நட்பு, இளமைக் காலத்திலிருந்தே தொடங்கியது. 1948-ல் ‘முரசொலி’ வார ஏடாக நடைபெற்று வந்த காலத்திலேயே டி.கே.சீ-யின் படைப்புகளை வெளியிட்டு வந்தார் கலைஞர். 1948 செப்டம்பர் 15 ஆம் தேதி நடைபெற்ற தயாளு அம்மையார்-முத்தமிழறிஞருக்குமான திருமண அழைப்பிதழிலும் சொற்பொழிவாளர்கள் வரிசையில் அண்ணாவின் பெயருக்கு அடுத்து இடம் பெற்றிருந்த பெயர் டி.கே.சீனிவாசனுடையது.

பெரியார் அறிவித்த போராட்டத்தால் கலைஞரின் திருமணத்தில் அண்ணாவால் கலந்துகொள்ளமுடியவில்லை. தனது திருமணத்துக்குத் தானே தலைமை தாங்கினார் கலைஞர். அவரின் திருமணத்துக்கு வாழ்த்துரையை வழங்கினார் டி.கே.சீ. அவர்கள்.

### எண்ணியதை எண்ணியவாறு எடுத்துரைத்தவர்

தன் எழுத்தின் மூலமாக அழியாது இடம்பெற்றவர் டி.கே.சீ. சிறுகதை, நெடுங்கதை, அரசியல் கட்டுரைகள் எனப் பல வடிவங்களிலும் தன்னை நிரூபித்தவர். எழுத்தின் மூலமாக சுயமரியாதைக் கருத்துகளைக் கொண்டு சேர்த்தார். ‘பொன்னி’ இதழில் அவர் எழுதிய ‘ஆடும் மாடும்’ தொடர்கதை பெரும் வரவேற்பைப் பெற்றது. பிறகு அது புத்தகமாக வெளிவந்தும் சிறப்புற்றது. ‘ஞாயிறு’ இதழில் இணை ஆசிரியராகப் பணியாற்றினார். ‘தாய்நாடு’ இதழுக்கு ஆசிரியராகவும் இருந்தார்.

1970-களில் டி.கே.சீனிவாசன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினராக்கிய கலைஞர், அவருக்கு தி.மு.க.வின் மாநிலங்களவைக் கட்சித் தலைவர் பொறுப்பையும் வழங்கிப் பெருமை சேர்த்தார். அத்தனை பெருமைப் பெற்ற டி.கே.சீ அவர்கள், 1989 அக்டோபர் 9 ஆம் தேதி உடல்நலக்குறைவால் மறைந்தார். மதுரையில் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு சென்னை திரும்பிய கலைஞர், செய்திகேட்டு நேராகத் தன்னுடைய வீட்டுக்குக்கூடச் செல்லாமல், டி.கே.சீ-யின் இல்லம் சென்று அவரின் திருவுடலுக்கு மரியாதை செய்தார்.

“என்னுடன் அளவற்ற அன்புடனும் அதே நேரம் அடிக்கடி ஊடல் கொண்டும், எதற்கும் அஞ்சாமல் எண்ணியதை எண்ணியவாறு எடுத்துக்கூறும் என் இனிய நண்பர் டி.கே.எஸ்.” என அவரின் மறைவு குறித்து எழுதினார் கலைஞர். ‘அசைக்க முடியாத ஆணி வேராக ஊன்றியுள்ள இயக்கம் தி.மு.க’ என்பார் கலைஞர். அத்தனை ஆழமாக கழகம் வேரூன்றக் காரணமான உடன்பிறப்புகளின் உழைப்பு என்றும் நிலைத்திருக்கும்.

**(துடிக்கும்...)**

---

## WHO பாராட்டும் ‘திராவிட மாடல்’!



நம் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மருத்துவத்துறை சாதனைகளின் வரிசையில் இணைந்திருக்கிறது, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ என்ற மகத்தான திட்டம். இதன் மூலம் மருத்துவச் சேவை, மக்களின் வீடுகளை நோக்கிப் பயணிக்கத் தொடங்கி இருகிறது.

இந்நிலையில், உலக சுகாதார நிறுவனம் (WHO) தமிழ்நாட்டில் முன்னெடுக்கப்படும் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தைக் குறித்து, கட்டுரை ஒன்றைத் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. காசநோய், நீரிழிவு, இதயக் கோளாறு போன்ற தொற்றா நோய்களைக் கண்டறியவும், அதற்கான சிகிச்சைகளை முன்கூட்டியே தொடங்கிடவும், எதிர்பாரா உயிரிழப்புகளைக் குறைத்திடவும் இத்திட்டம் பெரிய அளவில் உதவுவதாக அந்தக் கட்டுரை தெரிவித்துள்ளது. 2025-க்குள் ‘காசநோய் இல்லா இந்தியா’ என்ற இலக்கை அடைய மருத்துவ மற்றும் குடும்ப நல அமைச்சகம் உறுதியேற்று செயல்படுத்தி வரும் அதே வேளையில், ‘மக்களைத் தேடி மருத்துவம்’ போன்ற பரவலாக்கப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள் இலக்குகளை விரைந்து அடைய உதவும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்தக் கட்டுரையைக் கீழ்க்கண்ட உரலியில் வாசிக்கலாம் : BIT.LY/3XCR2LO

---

## :ப்ளாஷ்பேக்





மூர்த்தி

### தொண்டர்களால் ஆட்சி!

‘எப்போதும் வசந்தம்’ என்ற தலைப்பில் ஒரு தினசரி நாடகத்தை 1995-ஆம் ஆண்டு முதல், நிகழ்த்தி வந்தோம். அதன் 75 ஆம் நாள் அரங்கேற்றத்தின் போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அழைத்திருந்தோம். அவ்விழாவில் கலைஞரின் வருகைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய நான் “அடுத்தாண்டு கலைஞர் ஆட்சிபுரிவார். அதுவே எங்கள் அனைவரது ஆசை” என்றேன். கலைஞர் கிளம்பும் போது, ‘உன்னைப் போன்ற தொண்டன் இருக்கும்போது, அடுத்து நம்மதான்யா ஆட்சியமைக்கிறோம்’ என்றார். அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-எம்.டி.மூர்த்தி, நாடக நடிகர், திருவான்மியூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### வாய்மையே வெல்லும்!

**1967-ஆம் ஆண்டு, கழக ஆட்சி அமைந்த ஒரே மாதத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் இயங்குகிற புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம் என்கிற பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார் பேரறிஞர் அண்ணா. அந்தப் பெயர்ப் பலகையில் அரசின் இலச்சினையில் ‘மதராஸ் கவர்ன்மென்ட்’ என்று ஆங்கிலத்திலும், ‘சத்தியமேவ ஜயதே’ என வடமொழியிலும் சொற்கள் பொறிக்கப் பட்டிருந்தன. அந்த வழக்கத்துக்கு விடை கொடுத்து ‘தமிழ்நாடு அரசு – வாய்மையே வெல்லும்’ என்கிற தமிழ்ச் சொற்கள் இலச்சினையில் இடம்பெற முதன்முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 151




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131